**C.O.S.No.05/2023** **தேதி – 12.11.2025**

**வா.சா.2. – மணிமாறன்**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –**

இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் வாதி நிறுவனத்தில் உற்பத்தி பிரிவில் பொறியாளராக பணியில் இருப்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி நிறுவனம் பால் பாக்கெட் தயார் செய்யும் நிறுவனம் என்றால் சரிதான். வாதி நிறுவனத்திடம் வாங்கப்பட்ட பிலிம்கள் பால் பாக்கெட் தயார் செய்வதற்காக வாங்கப்பட்டவை என்றால் சரிதான். பால் பாக்கெட் தயார் செய்வதற்காக பெறப்பட்ட பிலிம் என்பதால் அவற்றில் கசிவு இல்லாமல் இருக்க வேண்டும் என்று சொன்னால் சதவீகிதத்தின் அடிப்படையில் கசிவு இருக்கும். நான் உற்பத்தி பிரிவில் பொறியாளராக இருப்பதால் வாதி கம்பெனிக்கும், 1ம் பிரதிவாதி கம்பெனிக்கும் பர்ச்சேஸ் ஆர்டரின்போது ஏற்பட்ட பேச்சு வார்த்தைகள் சம்பந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்மூலத்தில் உற்பத்தி செய்த பிறகு நிர்ணயிக்கப்பட்ட தரக்கட்டுப்பாடுகளை உறுதி செய்த பிறகு எங்கள் வாடிக்கையாளர்களுக்கு எங்கள் பிராடக்ட்டை அனுப்பி வைப்போம் என நான் கூறியுள்ளது லேப் டெக்னிசியனால் உறுதி செய்யப்படும். வாதி நிறுவனத்தில் உள்ள ஆய்வு கூடத்திற்கு என்று தனியாக பொறுப்பாளர்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். லேப் டெக்னிசியன்கள் பொருட்களை ஆய்வு செய்த பிறகு, நாங்கள் மேலும் ஒருமுறை சரிபார்த்துக் கொள்வோம். லேப் டெக்னிசியன் ஆய்வு செய்த பிறகு நாங்கள் மேற்படி பொருளை சரிபார்த்த பிறகு ஆய்வு அறிக்கையில் கையெழுத்து எதுவும் போட மாட்டோம் என்றால் சரிதான். லேப் டெக்னிசியன் ஆய்வு செய்யும் போது நாங்களும் உடன் இருந்து சரி பார்ப்போம் என்றால் சரிதான். பர்ச்சேஸ்

ஆர்டர் வந்தவுடன் எங்கள் நிறுவனத்திலிருந்து எந்த Specification–ல் பொருட்கள் தயார் செய்யப்பட வேண்டும் என்று பர்ச்சேஸ் ஆர்டரில் குறிப்பிடப் பட்டிருக்கும். 1ம் பிரதிவாதி கம்பெனியில் இருந்து பொருட்கள் வாங்கும் போது மாதிரி பிலிம் எங்கள் நிறுவனத்திற்கு கொடுப்பது வழக்கம் இல்லை என்றால் முதல் ஆர்டரின்போது மாதிரி பிலிம் கொடுக்கப்படும். பின்னர் ஒவ்வொரு பர்ச்சேஸ் ஆர்டரின்போது மாதிரி பிலிம் வழங்குவது வழக்கம் கிடையாது. 1ம் பிரதிவாதி நிறுவனம் பிலிம் பர்ச்சேஸ் செய்யும் போது அவர்கள் கம்பெனியில் உள்ள இயந்திரம் எந்த வேகத்தில் செயல்பட வேண்டும் என்றும், எந்த வெப்ப நிலையில் பயன்படுத்தப் பட வேண்டும் என்றும், வாதி கம்பெனியால் சொல்லுவது வழக்கம் இல்லை என்றால் ஆரம்பத்தில் பர்ச்சேஸ் ஆர்டர் செய்யும்போது நாங்கள் டிரையல் பிலிம் கொடுப்போம். அதன் அடிப்படையில் மற்ற பர்ச்சேஸ்கள் ஆர்டர்கள் கொடுக்கப்படுகின்றன. ஆரம்பத்தில் டிரையல் பிலிம் கொடுக்கும்போது சொன்னதை தவிர அதன் பின்னர் உள்ள பர்ச்சேஸ் ஆர்டரின்போது 1ம் பிரதிவாதி நிறுவனத்தில் உள்ள இயந்திரங்கள் எந்த வேகத்திலும், எந்த வெப்பத்திலும் இயங்க வேண்டும் என்று நாங்கள் குறிப்பிடவில்லை. 09.07.2019 ல் நாங்கள் சப்ளை செய்தது போலவே 10.12.2018 ம் தேதியிலும் 1ம் பிரதிவாதி கம்பெனிக்கு பிலிம் சப்ளை செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 ஆவணமானது 09.07.2019 ம் தேதியிட்ட பர்ச்சேஸ் ஆர்டர் சம்பந்தமான Quality Control ரிப்போர்ட் என்றால் சரிதான். 10.12.2018 ம் தேதியில் கொடுக்கப்பட்ட பர்ச்சேஸ் ஆர்டரிலும், வா.சா.ஆ.5 ல் கொடுக்கப்பட்டுள்ள Quality Control Report போலவே அறிக்கை அனுப்பப்பட்டிருக்கும் என்றால் சரிதான். 10.12.2018 ல் கொடுக்கப்பட்ட ஆய்வு அறிக்கையிலும் அனுப்பப்பட்ட பொருட்கள் தரமானவை என்று குறிப்பிட்டுத்தான் அறிக்கை பெறப்பட்டது என்றால் சரிதான். 10.12.2018 ம் தேதியிட்ட இன்வாய்ஸ் சம்பந்தமாக கொடுக்கப்பட்ட பிலிம்களில்

பகுதி பிலிம்களாக 431 கிலோ தரம் குறைவானவை என்று நிராகரிக்கப்பட்டது என்றால் சரிதான். பெரிய அளவில் தொழில் செய்யும் போது, சிறிய விகிதத்தில் இவ்வாறு நேர்ந்தால் அவை ஏற்றுக் கொள்ளப்படும். எங்களுடைய இன்வாய்சில் எந்த சதவிகிதத்தில் கசிவு ஏற்படும் என்று குறிப்பு எதுவும் இருக்காது. 431 கிலோ தரம் குறைவானவை என்று 1ம் பிரதிவாதி கம்பெனி கூறிய பிறகு அந்த 431 கிலோவில் Sample எடுத்து ஆய்வு செய்ய எங்கள் கம்பெனியில் இருந்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். 10.12.2018ம் தேதியிட்ட இன்வாய்ஸ் சம்பந்தமாக ஆய்வு அறிக்கை கொடுத்த அதே ஆய்வாளர்தான் 08.07.2019ம் தேதியிட்ட பர்ச்சேஸ் ஆர்டர் சம்பந்தமான பொருட்களுக்கும் ஆய்வு அறிக்கை கொடுத்தார் என்றால் சரிதான். 10.12.2018ம் தேதியிட்ட இன்வாய்ஸ் சம்பந்தமான Specification–னும், 08.07.2019ம் தேதியிட்ட பர்ச்சேஸ் ஆர்டர் சம்பந்தமான பொருட்களின் Specification–னும் ஒன்றாகத்தான் இருந்ததா என்றால் அந்தந்த பர்ச்சேஸ் ஆர்டர் Specification–ஐ பார்த்தால்தான் தெரிய வரும். 1ம் பிரதிவாதி கம்பெனி ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ள Specification–ல் எந்தவிதமான மாறுதலும் செய்யவில்லை என்றால் சரிதான். அதனால் 10.12.2018ம் தேதியிட்ட இன்வாய்ஸ் சம்பந்தமான பொருட்களில் என்ன Specification–ல் கொடுக்கப்பட்டது என்பதை ஆவணத்தில் பார்த்தால்தான் தெரியவரும். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் 20.07.2019, 21.07.2019 மற்றும் 22.07.2019 ஆகிய தேதிகளில் ஆய்வு செய்ததாக சொல்லும் சமயத்தில் நானும் உடன் இருந்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 கொடுக்கப்பட்டுள்ள ஆய்வு அறிக்கையில் எந்த Standard அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 20.07.2019, 21.07.2019 மற்றும் 22.07.2019 ஆகிய தேதிகளில் ஆய்வு செய்யப்பட்டதாக வா.சா.ஆ.5 ல் இணைக்கப்பட்டுள்ள அறிக்கையில் இல்லை என்றால் சரிதான். பொதுவாக நாங்கள் யாருக்கும் இவ்வாறு அறிக்கை

கொடுப்பதில்லை. 3 நாட்களுக்கான அறிக்கையை இணைக்கப்பட்டு இந்த அறிக்கை கொடுக்கப்படும். மேற்படி 3 தேதிகளை ஆய்வு செய்த பிறகு தனித்தனி அறிக்கை கொடுக்கப்படுமா என்றால் வா.சா.ஆ.31ல் குறிப்பிடுவார்கள். அதன் அடிப்படையில் வா.சா.ஆ.5 ல் இணைக்கப்பட்டுள்ள அறிக்கை கொடுக்கப்படும். எங்களது ஆய்வு கூடத்தில் உள்ள ஆவணங்களை பராமரிக்கும் பொறுப்பு எனக்கு கிடையாது என்றால் சரிதான். அது லேப் டெக்னிசியன்சின் வேலை ஆகும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.31 தான் Quality Control Report பராமரிக்கும் ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.31ல் கொடுக்கப்படும் Entry அனைத்தும் சரியாக உள்ளதா என்று நான் எதுவும் சரிபார்கக மாட்டேன் என்றால் நான் சரிபார்ப்பேன். மேற்படி ஆவணத்தில் Checked by என குறிப்பட்டுள்ள இடத்தில் உள்ள கையெழுத்து யாருடைய கையெழுத்து என்றால் ஆய்வு கூடத்தில் உள்ள ஆய்வாளரின் கையெழுத்து ஆகும். வா.சா.ஆ.31ல் நான் இந்த ஆவணத்தை சரிபார்த்தேன் என்று காட்டுவதற்கு என்னுடைய கையெழுத்து எதுவும் இல்லை என்றால் சரிதான். அதனால் இந்த ஆவணம் சம்பந்தமாக சாட்சியம் அளிக்க எனக்கு எந்த அருகதையும் இல்லை என்றால் சரியல்ல. 09.07.2019ம் தேதியில் பர்ச்சேஸ் ஆர்டர் சம்பந்தமாக பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்ட பிறகு மேற்படி பொருட்கள் சம்பந்தமாக வாதி கம்பெனிக்கும், 1 ம் பிரதிவாதி கம்பெனிக்கும் இடையே ஏற்பட்டபேச்சு வார்த்தைகள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் என்னுடன் கம்பெனியின் மேலாளர் கலந்து கொள்வார். 09.07.2019ம் தேதியிட்ட பர்ச்சேஸ் ஆர்டர் சம்பந்தமாக கொடுக்கப்பட்டுள்ள பொருட்களில் கசிவு இருப்பதாக 1ம் பிரதிவாதி கம்பெனி புகார் எழுப்பினார்கள் என்றால் சரிதான். மேற்படி கசிவு சம்பந்தமாக கண்ணன் என்பவர் 1ம் பிரதிவாதி கம்பெனிக்கு சென்று அதை சரிசெய்வதற்கு முயற்சி செய்தார் என்றால் சரிதான். கண்ணன் என்பவர் 1ம் பிரதிவாதி கம்பெனிக்கு சென்று டிரையல் செய்து நன்கு ஓட்டிய பிறகு மீண்டும் Sample

Product–ல் கசிவு ஏற்பட்டதாக புகார் எழுந்தது என்றால் சரிதான். கண்ணன் என்பவர் 1ம் பிரதிவாதி கம்பெனிக்கு சென்ற போது நான் அவருடன் செல்லவில்லை என்றால் சரிதான். கண்ணன் என்பவர் 1ம் பிரதிவாதி கம்பெனிக்கு சென்று டிரையல் செய்து நல்ல முறையில் ஓட்டினார் என்று நான் கூறுவது கண்ணன் என்பவர் சொல்வதை வைத்துதான் என்றால் சரிதான். கண்ணன் என்பவர் 1ம் பிரதிவாதி கம்பெனிக்கு சென்று டிரையல் செய்த பிறகு அறிக்கை எதுவும் அனுப்பினாரா என்றால் அறிக்கை எதுவும் அனுப்பவிலலை. அவர் வீடியோ எடுத்துள்ளார். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் பி.ஐ.எஸ் நிறுவனத்தால் அங்கிகரிக்கப்பட்ட தரக்கட்டுப்பாடுகள் படி பொருட்கள் அமைந்துள்ளது என வா.சா.ஆ.5 ல் இணைக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பு இல்லை. 1ம் பிரதிவாதி கம்பெனியில் இயந்திரங்களின் தரத்தை உயர்த்தியதால்தான் பொருட்களில் கசிவு ஏற்பட்டது என்று சொன்னால் தரத்தை உயர்த்தவில்லை, இயந்திரத்தை Alteration செய்துள்ளார். Alteration செய்த காரணத்தினால்தான் பிலிம்களில் கசிவு ஏற்பட்டது என்றால் சரிதான். இயந்திரத்தில் Alteration எப்போது செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. இயந்திரத்தில் Alteration செய்யும் போது வாதி நிறுவனத்திற்கு தெரிவிக்க வேண்டும் என ஒப்பந்தம் எதுவும் கிடையாது. ஆனால் அவர்கள் தகவல் கொடுத்திருக்க வேண்டும். 10.12.2018 ல் பர்ச்சேஸ் ஆர்டர் சம்பந்தமான பிலிம்களில் கசிவு ஏற்படும் போது 1ம் பிரதிவாதி கம்பெனியில் இயந்திரங்கள் எதுவும் Alteration செய்யப்படவில்லை என்றால் சரிதான். இயந்திரங்கள் Alteration செய்யப்படாத நிலையிலும் 10.12.2018 ம் தேதியில் பர்ச்சேஸ் ஆர்டரிலும் பிலிமில் கசிவு இருந்ததா என்றால் கசிவு இருந்தது. அது அவர்களின் இயந்திரங்களின் Parameter ல் பழுது ஏற்பட்டிருக்கலாம். 10.12.2018ம் தேதியிட்ட இன்வாய்ஸ் சம்பந்தமான பொருட்களுக்கு எங்கள் கம்பெனியில் இருந்து டெபிட் நோட் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த டெபிட் நோட் கொடுக்கும் போது

பொருட்களின் தரம் குறைவானது என ஒத்துக்கொள்ளப்பட்டது என்றால் பெரிய அளவில் தொழில் செய்யும் போது Mututal understanding–க்காக அவ்வாறு செய்வோம். பர்ச்சேஸ் ஆர்டர் சம்பந்தமாக பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்ட பிறகு அது சம்பந்தமாக சாட்சியம் அளிக்கை அருகதை இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்காள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.